**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**
O.S.No.13/2024

பி.வா.சா.5– வாசுதேவன் த/பெ ஆறுமுகம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 13.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பி.வா.சா.5– வாசுதேவன் த/பெ ஆறுமுகம்**
**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. என்னிடம் காட்டப்படும் EXB5 பணம் பெற்றதற்காக அத்தாட்சி எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் 2005 அல் எழுதப்பட்டதாகும். மேற்படி ஆவணம் எழுதும் தாவா சொத்தின் உரிமையாளர் யார் என்றால் 1ம் பிரதிவாதி தங்கராஜ் ஆவார். தங்கராஜ் நிலத்தை தங்கராஜை தவிர வேறு யாராவது நிலத்தை எழுதி தர சட்டப்படி உரிமையுள்ளதா என்றால் இல்லை தங்கராஜக்கும் அவரது மனைவிக்கு understanding 20 வருடமாக இல்லை , மனைவிக்கு ஜீவனாம்சமாக தங்கராஜ் நிலத்தை கொடுத்தார்.

2. தங்கராஜ்க்கும் வாதி பாக்கியத்திற்கும் ஜீவனாம்சம் வேண்டும் என்று வழக்கு நடந்ததா என்றால் நடந்தது. தாவா சொத்து மீது கோர்ட் உத்தரவின் படி ஜீவனாம்சத்திற்காக சார்ஜ் பாத்தியம் நீதிமன்றம் மூலம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் நீதிமன்றம் மூலம் சார்ஜ் பாத்தியம் ஏற்பட்டது எனக்குத் தெரியாது. ஜீவனாம்சத்திற்ககாக தங்கராஜ்ன் அவரது மனைவிக்கு தாவா சொத்தை கொடுத்தற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

3. ஜீவனாம்சம் வழக்கின் விவரம் எனக்குத் தெரியாது . ஜீவனாம்சம் வழக்கு பற்றி EXB5 பணம் பெற்றதற்காக அத்தாட்சியில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை ஒட்டி எனக்கு நிலம் இல்லை யென்றால் சரியல்ல பூர்வீக சொத்து உள்ளது. என்னிடம் காட்டப்படும பி.வா.சா.5 பணம் பெற்றதற்காக அத்தாட்சி பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது. ஈட்டுக்கடன் பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சட்டப்படி செல்லாது என்றால் எனக்குத் தெரியாது கிராம வழக்கப்படி செல்லும்.

4. எனக்கும் வாதி பாக்கியத்திற்கு முன் விரோதம் இருந்தது என்றால் இல்லை. நானும் மற்ற சாட்சிகளும் EXB5 பணம் பெற்றதற்காக அத்தாட்சி ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் EXB5 பணம் பெற்றதற்காக அத்தாட்சி ஆவணத்தில் உள்ள பாக்கியம்எ ன்பவரின் கையொப்பம் வாதி பாக்கியத்தின் கையொப்பம் அல்ல எங்களால்

போர்ஜரியாக போடப்பட்டது என்றால் சரியல்ல என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

5. என்னிடம் காட்டப்படும் EXB5 பணம் பெற்றதற்காக அத்தாட்சி 2005 நான் சொன்னது போல் எழுதவில்லை என்றும் 22.06.2006 அன்று தான் எழுதப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான் ஆனால் 2005 முன்பணம் கொடுத்துவிட்டோம். முன்பணம் கொடுத்து ஒரு வருடம் கழித்து ஆவணம் எழுதவேண்டிய அவசியம் ஏன் எற்பட்டது என்றால் பின்னால் தேவைக்கேற்பட்டவாறு பகுதியாக பணம் வாங்கிக்கொண்டார். பின்னால் பணம் வாங்கியதாக EXB5 பணம் பெற்றதற்காக அத்தாட்சியில் எழுதவில்லை என்றால் சரிதான்.

6. தாவாசொத்தின் சர்வே எண். 380/33 ஆகும். 2005 ல் பணம்கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு நான் இல்லை என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி எனக்கு நெருங்கிய நண்பர் அதனால் அவருடைய யோசனையின் பேரில் இந்த டாக்குமெண்ட் EXB5 பணம் பெற்றதற்காக அத்தாட்சியை அவருக்கு சாதகமாக பொய்யாக நாங்கள் தயாரித்து அதிலே வாதியின் கையொப்பத்தை நாங்களே போர்ஜரியாக போட்டுள்ளோம் என்றால் இல்லை என்று சொல்கிறேன்.

7. வாதி 2005 ல் EXB5 பணம் பெற்றதற்காக அத்தாட்சி எழுதிக் கொடுப்பதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. நான் 2 ம் பிரதிவாதிக்கா பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** வாதி பாக்கியம் என்பவர் செந்தில்நாதன் என்பவரிடம் பணம் வாங்கிக்கொண்டு பத்திரம் எழுதிக்கொடுத்தாக சொல்லப்படுவதற்கு என்ன பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் கடன் ஈட்டுப்பத்திரம் எழுதிக்கொடுத்தார் அதில் நான் சாட்சிக்கையொப்பம் போட்டுக்கொடுத்தேன் நான், கருணாநிதி, கண்ணன், ராமச்சந்திரன், ஆகியோர்கள் கையொப்பம் போட்டார்கள். பத்திரம் எழுதும் போது 1 ம் பிரதிவாதி தங்கராஜ் ஊரில் இலலை என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் தங்கராஜ் கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை அவருடைய மனைவி கையொப்பம் செய்தார். தங்கராஜக்கும், அவரது மனைவி எழுதி கொடுத்த பத்திரத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.17 11:08:12 +05'30'

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.